நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியாக இன்னும் ஒன்று தேவையா என்பதைப் பார்த்து, ஆய்வு செய்து பின்னால் சொல்லப்படும்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணி வட்டத்தில் துவங்க இருக்கின்ற அந்தத் தொழில் கூடத்தின் மதிப்பீடு எவ்வளவு? எத்தனை ஆண்டு காலத்தில் அது செயலாக்கத் திற்கு வரும் என்று அறிய விரும்புகிறேன். தென்னையிலிருந்து பேட்டரி செல்லுக்கு தேவையான கார்பனை தயாரிக்க தென்னை கொட்டாங்குச்சியிலிருந்து முடியும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அந்த தொழிற்பேட்டையில் இந்தத் தொழிலும் அடங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 எக்கர் நிலப் பரப்பிலே இதை இப்போது துவக்குகின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பங்கு மூலதனமாக அரசாங்கம் ரூ. 5 இலட்சத்தை இதற்காக ஒதுக்கி, 1987—88-ல் ரூ. 1.23 இலட்சத்தை ஒதுக்கி, வேலையை துவங்கு வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி வேறு எந்த தகவலும் தற்போது இல்லை.

புதுக்கோட்டை நகரில் மினி பேருந்து.

449—(*வினா எண். 10367) திரு. ஜே. முகம்மது கனி: மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் மினி நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) மினி பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கு வதற்கான நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

1987 ஏப்ரல் 22]

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டம் எப்போது செயலுக்கு வரும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த ஆய்வு செய்யப்பட்டு, அனுமதிச் சீட்டு கிடைத்தவுடன் அது செயலாக்கத்திற்கு வரும்.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் வடாற்காடு மாவட்டத் தலைநகரான வேலூரில் அரசு பேருந்தும், தனியார் பேருந்தும் ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு, பஜாரிலுள்ள ஒரு ஜவுளிக் கடைக்குள் புகுந்து, ஒரு கணவனும், மனைவியும் இறந்து, அவர்களுடைய இரண்டு குழந்தைகளும் அதே இடத்தில் இறந்துவிட்டன. வேகக் கட்டுப்பாடு விதியே இல்லாமல் அரசுப் பேருந்துகள் இன்றைய தினம் ஓடிக்கொண்டிருக்கின்றன. போக்குவரத்து அதிகமாக உள்ள வேலூர் போன்ற தலைநகரங்களில், கடுமையான வேகக் கட்டுப்பாடு விதிகளை கடுமையாக கடைப்பிடிக்க அரசு உத்தரவிடுமா? அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விருபுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் கொஞ்சம்கூட சம்பந்தமே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முகம்மது கனி அவர்கள் பஸ் விட வேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் விட்ட பஸ்ஸைப் பற்றி குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே வேகக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தினால் மிக அதிகமான வேகம் செல்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். இந்த விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் பொதுவாகச் சொல்கிறேன். குறிப்பிட்ட விபத்தைப் பற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. பொதுவாக ஓட்டுநர்களை மட்டும் நாம் குறைசொல்லிவிட்டால் போதாது. எல்லா வகையிலும் எல்லோருமே ஒத்துழைப்பு தரவேண்டும். பொது மக்களாக இருந்தாலும், பாதையிலே நடந்துசெல்லக் கூடியவர்களாக இருந்தாலும், எல்லோரும் ஒத்துழைப்பு கொடுக்கிறபோதுதான் அதிலே ஒரு நல்ல சூழ்நிலையை

உருவாக்க முடியுமே ஒழிய, ஒரு தரப்பை மட்டும் கட்டுப் படுத்துவது என்பது அவ்வளவு சரியாக வராது. அதற்காக வேகத்தை கட்டுப்படுத்த வேண்டாம் என்று நான் நினைக்க வில்லை. கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. அந்த சம்பந்தப்பட்ட பேருந்திலே என்ன நடந்திருக் கிறது என்பதைப் பற்றி நாங்கள் பார்த்து வருகிறோம்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளில் மினிப் பேருந்துகளை விடும் திட்டம் தமிழகத்திலுள்ள ஒரு இலட்சம் மக்களுக்கு மேலுள்ள எல்லா நகரங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எங்கெங்கு மினி பஸ் வேண்டுமோ அங்கேதான் விடமுடியுமே ஒழிய, எல்லா இடங்களுக்கும் விடவேண்டுமென்ற அவசியமில்லை. பெரிய பேருந்துகள் போய் திரும்பமுடியாத இடங்களிலேதான் மினி பஸ் விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதே ஒழிய, பெரிய பேருந்துகள் எங்கெங்கு போய் திரும்ப முடியுமோ, எங்கே அவர்கள் வசதியாக ஓட்ட முடியுமோ, அங்கே அந்த இடங் களுக்கு அது அவசியமில்லை. எனவே எங்கே அவசியம் இருக் கிறதோ, பெரிய பேருந்துகளை ஓட்ட முடியாத இடம், இப்படிப் பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்துத்தான் நாங்கள் மினி பஸ்களை விட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979-ஆம் ஆண்டு நிலக்கோட்டையில் மினி பேருந்து ஆரம்பிக்கப்பட்டது. அங்கே சரியான ரோடு வசதிகள் இல்லாத காரணத்தினாலே, பெரிய பஸ்கள் விடமுடியாது என்று மினி பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்போது அங்கே ஓடிக்கொண்டிருந்தவை வேறு தடங்களுக்கு சென்ற காரணத்தினால், அங்கே சரிவர மினி பேருந்து விடவில்லை. கேட்டால் அந்த பஸ்களை வேறு இடங்களுக்குக் கொண்டுபோய் விட்டார்கள், ஆகவே சரியான நோத்திற்கு விடவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே அங்கே விடப்பட்டிருந்த அந்த மினி பஸ்களை அங்கேயே நிரந்தரமாக

1987 ஏப்ரல் 22]

வைத்து அந்த குறுகலான பகுதிகளில் ஓடுவதற்கான ஏற்பாட்டை அமைச்சரவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு தனிப்பட்ட வழித் தடத்தைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். அதிலே பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்குமேயானால், பொது மக்களுக்கு அவசியம் என்று இருந்து, அந்த வண்டிகள் சரியாக வராமல் இருக்குமேயானால், தேவையான நடவடிக் கையை, அதுசம்பந்தப்பட்ட போக்குவரத்து நடவடிக்கையை எடுக்கலாம்.

மேற்கு ஜெர்மனி, மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம்.

450—(*வினா எண் 10403) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு ஜெர்மனி, மொரிஷ்யஸ் ஆகிய நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு 'இல்லை' என்று சொன்னார்கள். தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளான மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற பகுதிகளில் பூம்புகார் விற்பனை நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு அரசு உத்தேசித்து உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS